**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 150/2022**
**Deposition of witness of Plaintiff – P.W.1 (மீனாகுமாரி)**
**03.11.2025**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. எனது கணவர் இறந்தபிறகு வாரிசு அடிப்படையில் வழக்கை தொடர்ந்து நடத்துகிறேன் என்றால் சரிதான். எனது கணவர் உயிருடன் இருக்கும்போதே பிரதிவாதி செந்தில்குமார் காசோலை கொடுத்ததாக சொல்லி உள்ளார் என்றால் சரிதான்.

2. எனது கணவரும், பிரதிவாதியும் புதுக்கோட்டை லேனா நகைக்கடையில் ஒன்றாக வேலை பார்த்தார்கள் என்றால் சரிதான். எனது கணவர் அங்கு 10 வருடங்கள் வேலை பார்த்தார். பிரதிவாதி எவ்வளவு நாட்கள் வேலை பார்த்தார் என்று எனக்கு தெரியாது. எனது கணவர் எந்த வருடம் முதல் எந்த வருடம் வரை லேனா நகைக்கடையில் வேலை பார்த்தார் என்றால் வருடம் தெரியாது, சுமார் 15 வருடங்களுக்கு முன்பு வேலை பார்த்தார்.

3. லேனா நகைக்கடைக்கு லேனா.முருகானந்தம் என்பவர் உரிமையளார் என்றால் சரிதான். எனது கணவர் அங்கு கணக்கு வழக்கு வேலை பார்த்தார். எனது கணவர் B.Sc படித்துள்ளார்.

4. பிரதிவாதி லேனா நகைக்கடையில் என்ன வேலை பார்த்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் லேனா நகைக்கடையை தவிர வேறு எங்கும் வேலை பார்க்கவில்லை என்றால் கடையில் வேலை பார்த்து கொண்டு தனியாகவும் தொழில் செய்து வந்தார்.

5. தனியாக என்ன தொழில் செய்து வந்தார் என்றால் அவரது தகப்பனார் வட்டி கடை வைத்திருந்தார், அதில் வேலை பார்த்தார். அவரது தகப்பனார் பெயர் ராமசாமி ஆகும். அந்த வட்டிக்கடைக்கு உரிமம் உள்ளதா என்றால் சிறிய கடை என்பதால் உரிமம் இல்லை.

6. பிரதிவாதி லேனா நகைக்கடையில் எவ்வளவு நாட்கள் வேலை பார்த்தார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி எனது கணவரிடம் கடன் கேட்டு எத்தனை காசோலைகள் கொடுத்தார் என்றால் மூன்று காசோலைகள் கொடுத்தார். எந்த தேதியில் எவ்வளவு தொகை எனது கணவர் கடன் கொடுத்தார் என்றால் 2019 ஆம் வருடம் ரூ.2,55,000/- கொடுத்தார். மேற்படி கடனை எனது கணவர் கணக்கிலிருந்து கொடுத்தாரா அல்லது அவரது அப்பாவின் கணக்கில் கொடுத்தாரா என்றால் எனது கணவர் கணக்கில் இருந்து தான் கொடுத்தார்.

7. எனது கணவர் பிரதிவாதியை தவிர வேறு யாருக்காவது கடன் கொடுத்துள்ளாரா என்றால் வேறு சிலருக்கும் கொடுத்து வாங்கியுள்ளார். அந்த கடன்களை பொருத்து கணக்கு எழுதி வைத்துள்ளாரா என்றால் இல்லை.

8. பிரதிவாதி மூன்று காசோலைகளையும் ஒரே நாளில் கொடுத்தாரா அல்லது வெவ்வேறு நாளில் கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9. தாவா கடன் தொகையை தவிர வேறு கடன் தொகை எனது கணவரிடம் பிரதிவாதி வாங்கியுள்ளாரா என்றால் இல்லை, தாவா ஒரே கடன் மட்டும் தான் வாங்கியுள்ளார்.

10. பிரதிவாதி கடன் வாங்கியதாக சொல்வதும், காசோலை கொடுத்ததாக சொல்வதும், எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. என்னிடம் அது பற்றி எனது கணவர் சொல்லியுள்ளார்.

11. எந்த வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு எனது கணவர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் அவரது பெயர் நியாபகம் இல்லை. மேற்படி அறிவிப்பிற்கு பிரதிவாதி பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், காசோலையை தவறாக பயன்படுத்தி அறிவிப்பு அனுப்பியுள்ளதாக பதிலறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

12. பிரதிவாதி எனது கணவரிடம் கேட்பு கடனுறுதி சீட்டு மூலம் ரூ.3,00,000/- கடன் வாங்கியதாக ஆரோக்கியசாமி என்ற வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கும் கேட்பு கடனுறுதி சீட்டு மூலம் கடன் வாங்கவில்லை என பிரதிவாதி பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான்.

13. கேட்பு கடனுறுதி சீட்டு மூலம் வாங்கியதாக சொல்லும் கடனை பொருத்து எனது கணவர் வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் இல்லை. லேனா நகைக்கடையில் வேலை பார்த்தபோது கடையில் பிரதிவாதி வைத்திருந்த காசோலையை பயன்படுத்தி எனது கணவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

14. காசோலையை பயன்படுத்தி குற்ற வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு எனது கணவர் கடன் கொடுத்ததாக சொல்வதும், அதற்கு ஆதரவாக பிரதிவாதி காசோலைகள் கொடுத்ததாக சொல்வதும் தவறு என்றால் சரியல்ல.

15. நாங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledged by him and found correct.

S/d- C.Rajesh, B.A.B.L.,
சார்பு நீதிபதி,
கீரனூர்.